<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**<u>O.S.No.13/2018</u>**

பெயர் : சௌந்தர்ராஜன்

த/பெ. : சிங்காரம் பிள்ளை

தேதி : 30.07.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**<u>4, 5, 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

தண்ணீர்பந்தல் வேறு டிரஸ்டியிடமிருந்து தாவா சொத்தை பன்னீர்செல்வம் என்பவர் ஆக்கிரமித்துள்ளார். தாவா கிராமத்தில் கோவிந்தராஜ் பிள்ளை என்பவர் வசித்து வந்தார். அவர் அப்போதைய டிரஸ்டி ஆவார். கோவிந்தராஜ் பிள்ளை டிரஸ்டியாக இருந்தபோது சௌந்தராஜபிள்ளை, முருகேச பிள்ளை, கோவிந்தராஜ்பிள்ளை,. ராமலிங்கம் பிள்ளை ஆகியோர் இருந்தார்கள். சௌந்தராஜபிள்ளை என்பது நான் தான். 1976 ஆம் வருடம் முருகேச பிள்ளை காலத்தில் தாவா சொத்தானது பன்னீர்செல்வத்தின் அனுபவத்தில் வந்தது என்றால் சரிதான். அதற்காக சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.282/1976என்ற வழக்கில் பன்னீர்செல்வம் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி முருகேசன் பிள்ளை என்பவர் வழக்கு தாக்கல் செய்தார். அறக்கட்டளை அறங்காவலர் என்பவதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர தகுந்தது இல்லை என வழக்கு தள்ளுபடி ஆனது. அதனை எதிர்த்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு எண் 139/1978 என்ற எண்ணில் அறக்கட்டளை மேல்முறையீடு செய்தது.

மேற்படி பன்னீர்செல்வம் தாவா சொத்தின் 0.10 சென்ட் நிலம் சாகுபடிதாரர் என்றும், அவருக்கு குத்தகை உரிமை உண்டு என தீர்ப்பானது. மேலும் அந்த மேல்முறையீட்டில் 0.10 சென்ட் நிலம் அறக்கட்டளை வசம் உள்ளதாக தெரிவித்தார்கள். பின்னர் வருவாய் நீதிமன்றத்தில் பன்னீர்செல்வத்தை வெளியேற்ற மனுத்தாக்கல் செய்தோம். 15.04.2009ல் வெளியேற்றுகை உத்தரவு வழங்கப்பட்டது. அதனை எதிர்த்து நாகப்பட்டினம் மாவட்ட நீதிமன்றத்தில் பன்னீர்செல்வம் மேற்முறையீடு செய்தார். இன்றைய தேதி வரை தாவா சொத்தானது எங்கள் வசம் தான் இருந்து வருகிறது. நான் தற்சமயம் தாவா சொத்தினை வசம் வேண்டுமென்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மணல்மேடு காவல் நிலையத்தில் தாவா சொத்தில் உள்ள வைக்கோல் போரை அப்புறப்படுத்தி தரவேண்டும் என புகார் கொடுத்தோம். அதன்பேரில் மணல்மேடு காவல் நிலையத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மயிலாடுதுறை நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் தாவா இடத்திற்கு நான் சென்றபோது பன்னீர் செல்வம் என்னை வெட்ட வந்ததாக குற்ற வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் தீர விசாரணைக்கு

பிறகு வழக்கில் உண்மை இல்லை என்று கூறி அந்த குற்ற வழக்கினை தள்ளுபடி செய்தார்கள்.

தாவா சொத்தை தவிர மற்ற நஞ்சை நிலம் 1ஏக்கர் 32 சென்ட்டினை வசம் எடுத்துவிட்டோம். தாவாசொத்தினையோ, 1 ஏக்கர் 32 சென்ட்டையோ பன்னீர் செல்வம் என்பவரிடமிருந்து வசம் எடுத்ததற்கான எந்த உத்தரவையும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவாசொத்தினையோ, 1 ஏக்கர் 32 சென்ட்டையோ பன்னீர் செல்வம் என்பவரிடமிருந்தோ, அவரது வாரிசுகளிடமிருந்தோ எந்த ஒரு காலத்திலும் வசம் எடுக்கவில்லை என்று சொன்னால் எங்களுக்கு வருவாய் நீதிமன்றத்தில் எழுதிக்கொடுத்ததை தவிர வேறு ஒன்றும் இல்லை. வசம் எப்படி எடுக்க வேண்டும் என்ற செயல்முறைகள் எப்படி என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதுபோல் வசம் எடுப்பதற்கான எந்த ஒரு உத்தரவோ ஆவணமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றத்தின் மூலம் வசம் எடுத்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தாவா சொத்து சம்பந்தமாக பன்னீர் செல்வம் என்பவருக்கு மட்டும் அறிவிப்பு அனுப்பினோம். அவர் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்ந்துள்ளோம்.

தாவா சொத்தானது 1976 முதல் பன்னீர் செல்வம் மற்றும் அவரது வாரிசுகளிடம் வசம் இருந்து வந்தது என்று சொன்னால் இல்லை. வருவாய் நீதிமன்றத்தில் உத்தரவு போட்டது முதல் எங்கள் வசம் இருந்து வருகிறது. தாவாசொத்தினை பன்னீர் செல்வத்திடமிருந்து வசம் எடுத்துவிட்டோம் என்பதற்கான அறக்கட்டளை ஆவணங்கள் எங்கள் வசம் உள்ளது. அவ்வாறான ஆவணங்கள் குத்தகைக்கான ஆவணங்கள் தான் உள்ளதே தவிற மற்ற ஆவணங்கள் எதுவும் கிடையாது அதனால் தாக்கல் செய்யவில்லை. என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1 முதல் 10 ஆவணங்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்தினை காலிசெய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் என்ன கட்சி செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அவர்கள் எந்த கட்சியும் சொல்லவில்லை. அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவும் இல்லை. எனக்கும், பன்னீர்செல்வத்திற்கும் அவர் உயிருடன் இருக்கும் வரை முன்விரோதம் இருந்து வந்தது காரணத்தினால் நான் மட்டும் பொய்யான சங்கதிகளை கொண்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மைனர் சக்தி என்பவருக்கு என்ன வயது இருக்கும் என்றால் 2 வயது இருக்கும். 7ம் பிரதிவாதி எழிலரசு என்பவர் 1ம் பிரதிவாதியின் மகனாவார். 7ம் பிரதிவாதி வெளிநாட்டில் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் இறந்துபோனார். தாவா சொத்தை பொறுத்தவரையில் 1ம் பிரதிவாதி பன்னீர்செல்வமும் அவரது வாரிசுகளும் ஏறக்குறைய 50 வருடங்களுக்கு மேலாக தனது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் வைத்து அனுபவத்து வந்தார் என்றால் சரியல்ல. பன்னீர்செல்வம் பேரில் நாகப்பட்டினம் நில அபகரிப்பு பிரிவு அலுவலகத்தில் பன்னீர் செல்வம் தாவா சொத்தினை அபகரித்து விட்டதாக வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் விசாரணை இல்லை.

நீதிமன்றத்தை அணுக கூறினார்கள். அதன் பின்னர் குற்றவியல் நடுவர் எண் 1லும் அதனை தொடர்ந்து இந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மற்ற அறங்காவலர்கள் வழக்கில் விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம்.

அவர்களை விசாரித்தால் உண்மை நிலை தெரியவரும்என்பதால் தான் அவர்களை விசாரிக்காமல் நான் சாட்சியம் சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு காரணம் அறக்கட்டளையில் யார் மூத்தவரோ அவர் தான் சாட்சி சொல்ல வேண்டும் என்பதால் நான் சாட்சி சொல்லுகிறேன். அந்த அறக்கட்டளை சம்பந்தமான பத்திரம் எதுவும் எங்கள் கைவசம் இல்லை. அந்த அறக்கட்டளை பத்திரம் என் கைவசம் தான்உள்ளது என்றாலும் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் உண்மை நிலை தெரியவரும் என்பதால் அந்த அறக்கட்டளை பத்திரம் தாக்கல் செய்யவில்டைல என்று சொன்னால் சரியல்ல. அது ஏற்கனவே நீதிமன்றத்தில் உள்ளது. அந்த அறக்கட்டளை பத்திரமானது மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் தான் உள்ளது. அந்த பத்திரமானது O.S.139/1978 என்ற வழக்கில் உள்ளது. அந்த பத்திரத்தை நீதிமன்றத்திலிருந்து பெற்று தாக்கல் செய்ய முடியும். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றாலும் 50 வருடங்களுக்கு மேலாக பிரதிவாதிகள் தொடர்ந்து கிராமத்தார்கள் அனைவரும் அறியும் வண்ணம் அனுபவித்து வருவதால் அனுபவபாத்தியம் செய்துவருவதால் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே இதுசம்பந்தமாக நீதிமன்றத்தில் தீர்ப்பாகி உள்ளது. அந்த வழக்கில் மணிமேகலை அனுபவ பாத்தியம் உரிமை கேட்டு கட்சி ஆடி நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுவிட்டது. நான் சொல்லும் மணிமேகலை இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த இந்தவழக்கும் காலாவதியால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் கோரும் எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.